DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PANRUTI.

STC.No 240/2024

Deposition of Witness : LW1/PW4

| Name | வடிவேல் | Taluk | |
|---|---|---|---|
| Father's Name | ராமலிங்கம் | Village | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of **09.06.2025.** | | | |

( Accused Present.)

சாட்சியை முத்தாண்டிக்குப்பம் காவல் நிலைய முதல்நிலை காவலர் திரு.M. ஜான்பால் Gr-I 790 அவர்கள் அடையாளம் காட்டினார்.

**<u>அரசு தரப்பில் முதல் விசாரணை:</u>**

1. நான் தற்போது சொரத்தூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது Fittor வேலை செய்து வருகிறேன். வழக்கு விபத்தில் அடிப்பட்ட சங்கர் எனது மகன். மேற்படி வழக்கு விபத்தில் என் மகனுக்கு வலது காலில் எலும்பு முறிவு ஏற்பட்டு அவர் விபத்திற்கு முன்னர்போல் சரியாக நடக்கமுடியாமலும், அவரது வேலைகளை அவராகவே செய்யமுடியாமல் இருந்து வந்ததால் மன உளைச்சல் ஏற்பட்டு தற்கொலை செய்துகொண்டார். அ.சா.1 சண்முகம், அ.சா.2 ராமு ஆகியோர்களை தெரியும். அவர்கள் நான் வசிக்கும் ஊரை சேர்ந்தவர்கள்.

2. கடந்த 23.07.2023 அன்று நான் எனது வீட்டில் இருந்தபோது, மாலை சுமார் 06.30 மணியளவில் எனக்கு போன் கால் வந்தது. மேற்படி போனை நான் Attend செய்தபோது போன் காலில் பேசிய நபர் சண்முகம் ஆவார். அவர் என்னிடம் எனது மகன் சங்கர் எங்களுக்கு சொந்தமான TN 31 BK 6550 என்ற பதிவெண் கொண்ட Hero H.F. Delux என்ற இருசக்கர வாகனத்தில் கொள்ளுக்காரன்குட்டை - முத்தாண்டிக்குப்பம் செல்லும் சாலையில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி மானடிக்குப்பம் சித்தான்காத்தான் என்பவரின் வீட்டின் அருகே சென்றுகொண்டு இருந்தபோது என் மகனுக்கு எதிர் திசையில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்த தடம் எண்.25 என்ற அரசு பேருந்தை (பதிவெண் தற்போது ஞாபகமில்லை) அதன்

ஓட்டுனர் வேகமாகவும், ஆரன் அடிக்காமலும் ஓட்டி வந்து என் மகன் வாகனத்தின் மீது மோதி, விபத்து ஏற்படுத்தியதாகவும், மேற்படி விபத்தில் என் மகன் தூக்கி எறியப்பட்டு விழுந்ததில், அவனது வலது காலிலும், உடலிலும் பலமாக அடிப்பட்டது என்றும், அடிப்பட்ட என் மகனை 108 ஆம்புலன்ஸ் மூலம் பண்ருட்டி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்துள்ளதாகவும் எனக்கு தகவல் சொன்னார்.

3. மேற்படி தகவல் கிடைத்தவுடனே நான் பண்ரு அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது என் மகனுக்கு சிகிச்சை அளித்துக்கொண்டு இருந்தார்கள். என் மகனை மேற்படி மருத்துவர்கள் கடலூர் அரசு மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்கு அழைத்துசெல்லுமாறு பரிந்துரை செய்தார்கள். ஆனால், என் மகனை கடலூரில் உள்ள தனியார் மருத்துவமனையான BE WELL மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்கு அழைத்து சென்று மேற்படி மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டது. மேற்படி மருத்துவமனையில் எனது மகனின் வலது காலில் X-ray எடுத்து பார்வையிட்ட மருத்துவர் என் மகனின் வலது காலில் எலும்பு உடைந்து, எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளதாகவும், அறுவை சிகிச்சை செய்யவேண்டுமென்றும் கூறினார். என் மகனுடன் மேற்படி மருத்துவமனையில் உதவியாக இருந்துவிட்டு பின்னிட்டு முத்தாண்டிக்குப்பம் காவல் நிலையம் வந்து 24.07.2023 அன்று மேற்படி விபத்தை ஏற்படுத்திய ஓட்டுனர் மீது நடவடிக்கை எடுக்க கோரி புகார் மனு அளித்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனுதான் அது. அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். புகார் மனுவில் உள்ள அம்சங்கள் எனக்கு தெரியும். (**மேற்படி புகார் மனு அ.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) மேற்படி விபத்தை ஏற்படுத்திய பேருந்தின் ஓட்டுனரை நான் பார்க்கவில்லை. அதனால் மேற்படி ஓட்டுனரை நான் அடையாளம் காண இயலாது. ஆஜர் எதிரியை நான் இன்றுதான் தற்போது நீதிமன்றத்தில் பார்க்கிறேன். மேற்படி விபத்தை ஏற்படுத்திய அரசு பேருந்தினை ஓட்டிய ஓட்டுனர் என்று நீதிமன்றத்திற்கு இன்று வந்தபின்னர்தான் நேரில் பார்த்து தெரிந்துகொண்டேன்.

4. மேற்படி BE WELL தனியார் மருத்துவமனையில் எனது மகனின் வலது காலில் மருத்துவர்கள் அறுவை சிகிச்சை செய்தார்கள். மேற்படி மருத்துவமனையில் என் மகனுக்கு எடுக்கப்பட்ட X-Ray, சிகிச்சை அளிக்கப்பட்ட மருத்துவ ஆணவங்கள் அனைத்தும் என்னிடம் உள்ளது. மேற்படிமருத்துவ ஆவணங்களையும், X-Ray

படத்தையும் நான் தற்போது நீதிமன்றத்திற்கு கொண்டுவரவில்லை. அடுத்த வாய்தாவில் சமூகம் நீதிமன்றத்தில் மேற்படி மருத்துவ ஆவணங்களை சமர்ப்பிக்கிறேன்.

முதல் விசாரணை தொடர்ச்சிக்கா ஒத்திவைக்கப்படுகிறது.